மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : OS 133/22

பெயர் : ராமலெட்சுமி (PW1)

க/பெ : பொன்னுசாமி

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29 th day of October 2024

**1 ,4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எங்கள் தோட்டத்தில் எங்களை விவசாயம் செய்யவிடாமல் தடுப்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.என் கணவர் பொன்னுசாமி வழக்கு சொத்தை பொறுத்து பதிவு செய்த ஆவணத்தை புதியவன் பெயரில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் எழுதி கொடுத்தது எனக்கு தெரியாது.

2)நாங்கள் தூத்துக்குடிக்கு சென்று 25 வருடம் இருக்கும்.தாவா சொத்து புளியம்பட்டி கிராமத்தில் உள்ளது.அதன் புல எண் எனக்கு தெரியாது.2018 ஆம் வருடம் விவசாயம் செய்ய சென்றபோது தடுத்தார்கள்.என் கணவருக்கு கையொப்பம் செய்ய தெரியும்.என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் இருப்பது என் கணவரின் கையொப்பம் தான்.என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 20.10.1995 ல் என் கணவர் புளியம்பட்டியில் உள்ள சொத்தினை கிரையம் செய்வதற்கு ரூபாய் 7000 முன் பணம் பெற்றதற்கான ரசீது என்றாலும் அதில் இருப்பது என் கணவரின் கையொப்பம் என்றாலும் கையொப்பம் என் கணவருடையது , மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது.

3)தாவா சொத்தை நான் பார்வையிடவில்லை என்றால் சரியல்ல பார்வையிட்டோம்.சொத்து அனுபவத்தில் இருந்தால் தான் கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் , பயிர் எடுப்பு அடங்கல் ஆகியவற்றை வழங்குவார்கள் என்றால் சரிதான்.நாங்கள் தான் பயிர் செய்து வந்தோம். நாங்கள் பயிர் செய்து வருவதை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும் 14.10.2024 அன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தபோது பயிர் எடுப்பு ஆவணங்களை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.நெல், வற்றல், பருத்தி ,கத்தரிக்காய்

ஆகியவற்றை பயிர் செய்தோம்.மேற்படி பயிர்களை 1990 ல் பயிர் செய்தோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4)நிரூபண வாக்குமூலத்தில் பயிர் செய்தோம் என்று சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது.தாவா சொத்தை பொறுத்து அதன் நான்கு மால்களிலும் இருக்கும் சொத்தின் உரிமையாளர்களை விசாரித்தால் நாங்கள் பயிர் செய்தோம் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி மற்றொரு நாளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.